# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 89/2020 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செல்வராஜ் | நாள் | 23.10.2024 |
| தகப்பனார் பெயர் | சவரிமுத்து | | |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

35) தாவா சொத்தை நான் கிரயம் பெற்றதற்கு பின்னிட்டு என் பெயரில் வீட்டு வரி செலுத்தப்பட்டுள்ளதா என்றால், இல்லை. வரி விதிப்பு பதிவேட்டில் என் பெயர் இடம் பெறவில்லை. என் முன் விற்பனையாளரான முகமது உசேன் பெயரிலேயே நான் தொடர்ந்து செலுத்தி வருகிறேன். மேற்படி வரி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நாளது தேதி வரை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்த தேதி வரை தாக்கல் செய்துள்ளேன். அதற்கு பின்னிட்டு தாக்கல் செய்துள்ள ரசீதுகள் என் வசம் உள்ளது.

36) நான் சொல்வது தவறானது என்றாலும், தாவா சொத்து அமைந்துள்ள பகுதி நீர் நிலை புறம்போக்கு என்பதால், அதற்கு அரசாங்கத்தால் வரி எதுவும் விதிக்கப்படுவதில்லை என்றாலும், அவ்வாறுள்ள நிலையில், தற்போதும் நான் வரி செலுத்துவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது போல தான் நான் கடந்த 2018ம் வருடம் என் வீட்டை வாங்கியபோது அதன் அமைப்பு இருந்தது என்றால், இல்லை. நான் கடந்த 2020ம் வருடத்தில் என் வீட்டை வாங்கியபோது தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது போல் குப்பைகள் கொட்டப்பட்டிருந்தது என்றால், சரியல்ல.

37) நான் கடந்த 2020ம் வருடம் தாவா சொத்தை கிரயம் பெற்று, அதில் கூடுதல் கட்டுமானங்கள் செய்தபோது அப்போது அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் காவல் நிலையத்தில் என் மீது புகார் அளித்தனர் என்றால், புகார் அளித்தனர். ஆனால், அது வேறு பிரச்சனை தொடர்பானது. தற்போது தாவா பிரச்சனைக்காக அல்ல. கடந்த 2020ம்

வருடத்தில் மேற்படி தாவா சொத்தில் நான் ஒரு அமைப்பை ஏற்படுத்தியதற்காக காவல் துறையினர் என்னையும், பிரதிவாதிகளையையும் அழைத்து விசாரித்தனர் என்றால், சரிதான். பின்பு மீண்டும் பிரதிவாதிகளால் முதலமைச்சர் தனி பிரிவிற்கு மனு அளிக்கப்பட்டு அதன் பேரில் என்னை காவல் துறையினர் விசாரித்தனர் என்றால், இல்லை.

38) நான் இவ்வழக்கு தாக்கல் செய்தற்கு பின்னிட்டுதான் தாவா சொத்தில் கார் நிறுத்துவதற்கு செட் அமைத்தேன் என்றால், சரிதான். நான் நீர் வழி பாதையை ஆக்கிரமித்து கட்டியுள்ள அமைப்பை வருவாய் துறையினர், மேட்டுர் நகராட்சி, காவல் துறையினர் இடித்தனர் என்றால், அவர்கள் இடிக்கவில்லை. நான் கேட் வைப்பதற்காக சுவர் அமைத்தேன். மேற்படி சுவர் தவறுதலாக சாக்கடையின் மேற்பரப்பில் வந்துவிட்டதால், அதை சுயமாக நானே இடித்துவிட்டேன். நான் சொல்வது தவறானது என்றாலும், தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 புகைப்படத்திலேயே தாவா சொத்திலுள்ள வீடு கேட் உடன் தான் உள்ளது என்றாலும், தற்போது நான் வழக்கிற்காக தாவா தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு கேட் அமைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

39) நான் நீர்வழிப்பாதையை ஆக்கிரமித்து தாவா வீட்டையும், செட்டையும் கட்டிவிட்டதால், தற்போது அதை மறைக்கவேண்டி, இந்த பிரதிவாதிகள் மீது தவறான சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் என் மீது தொடர்ந்து புகார் மனுக்களை தாக்கல் செய்து, எனக்கு மனஉலைச்சல் ஏற்படுத்தினர். அதனால் தான் தற்போது நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால், ஆமாம். மேலும் பிரதிவாதி என்னுடைய நிலத்தில் அவருக்கு 3 அடி நிலம் உள்ளதாக கூறுகிறார்.

40) நான் என் பெயரிலுள்ள பதிவு செய்யப்படாத கிரய பத்திரத்தை தவிர தாவா சொத்து தொடர்பாக என் பெயரில் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இவ்வழக்கை நான் 400 சதுரடியில் வீடு கட்டியுள்ளதாக கூறி

தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் தாவா சொத்தை கிரயம் பெறும் பொழுதே 400 சதுரடியில் வீடு இருந்ததாக கூறிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தற்போது மேற்படி 400 சதுரடி நிலத்தையும் தாண்டி, என் வீட்டை அதிகப்படுத்தியுள்ளேன் என்றால், சரிதான். ஆனால், அது கார் செட் ஆகும். மேற்படி கார் செட் எத்தனை அடி என்றால், எனக்கு அளவுகள் தெரியாது. ஆனால் அது சுமார் ஒரு கார் நிறுத்தும் அளவிற்கு இருக்கும்.

41) இவ்வழக்கை நான் பொய்யான சங்கதிகளுடன் பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்து, அதை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றாலும், சரியல்ல.

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.